வாரம் - 13 ஊக்கப் பாடல் எண் - 13

# திருக்குறள்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை.

- திருவள்ளுவர்

திருக்குறள் பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.



# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

எங்கு படிக்கிறாய் ? எங்கு விளையாடுகிறாய் ? வீடு எங்கு உள்ளது ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## எங்கு படிக்கிறாய் ?

**தமிழ்ப் பள்ளியில் படிக்கிறேன்.**

**சென்னையில் படிக்கிறேன்.**

**சென்னையில் தமிழ்ப் பள்ளியில் படிக்கிறேன்.**

## எங்கு விளையாடுகிறாய் ?

**விளையாட்டுத் திடலில் விளையாடுகிறேன்**

## பந்து எங்கு உள்ளது ?

**பந்து விளையாட்டு அறையில் உள்ளது.**

## நீ எங்கு செல்கிறாய் ?

**நான் வீட்டிற்குச் செல்கிறேன்.**

வேறு வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.

**எங்கு** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்

## வாரம் - 13 பாட அறிமுகம்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

# வாரம் - 13

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ...................................... நிலை............ நாள்................

( கற்றுக்கொண்ட ன் ன எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ன் | ன | ன் | ன | ன் | ன |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 13

## மாணவர் செயற்பாடு எண் - 2


**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ன் ன எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

னா னெ னே னோ - எழுத்துகளில் உள்ள ன எழுத்தை வட்டமிட்டாலும் சரியே

# வனவிலங்குகளின் சரணாலயமாக மாறியது சத்தியமங்கலம்

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் பவானிசாகர், ஆசனூர், தாளவாடி, டி.என். பாளையம் உள்பட வனப்பகுதிகள் உள்ளன.




இந்த வனப்பகுதி அடர்ந்த வனப்பகுதியாக கருதப்படுகிறது.

### சிறுத்தை–கரடி

இந்த வனப்பகுதியில் காட்டு யானை, காட்டு எருமை, புலி, சிறுத்தை, மான், கரடி, செந்நாய், கழுதைபுலி, எறும்புத்திண்ணி போன்ற பல்வேறு வகையான வனவிலங்குகள் வாழ்ந்து வருகிறது. இந்த வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி நடந்து முடிந்தது.

இந்த பணியில் ஈடுபட்டவர்கள் சிறுத்தை மற்றும் புலியை நேரில் பார்த்தார்கள். இது தவிர சத்திய மங்கலம், ஆசனூர், தாளவாடி ஆகிய வனப் பகுதிகளில் புலிகள், சிறுத்தைகளின் கால் சுவடுகளும் அதிகமாக காணப்பட்டுள்ளது.

### அதிகரிப்பு

இது வனத்துறையினர்களுக்கு இன்பத்தையும், அதிர்ச்சியையும் அளித்துள்ளது. மேலும் செந்நாய்களை பல்வேறு இடங்களில் பார்த்துள்ளனர். கழுதைப்புலிகளும் கண்களில்பட்டுள்ளது. சந்தன கடத்தல் மன்னன் வீரப்பன் உயிரோடு இருந்தபோது யானைகளை கொன்று தந்தத்தை வெட்டி எடுத்தான். இதனால் யானைகள் குறைய தொடங்கியது. இப்போது வீரப்பன் இல்லை. இதனால் யானைகள் பல அதிகரித்துள்ளது.

புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தால் தாளவாடி மற்றும் ஆசனூர் மலைப்பகுதிகளில் இருந்த காட்டெருமை தற்போது சமதளமான வனப்பகுதியான பண்ணாரி பகுதிக்கு அதிகமாக இடம் பெயர்ந்துள்ளது.

சிறுத்தைகளின் எண்ணிக்கை கூடியளவு மான்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்துள்ளது. நாள்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் சத்தியமங்கலத்தில் இருந்து பண்ணாரி செல்லும் வழியில் உள்ள வனக்குட்டையில் நூற்றுக்கணக்கான மான்கள் கூட்டம், கூட்டமாக வந்து தண்ணீர் குடித்துவிட்டு செல்வதை இந்த வழியாக செல்லும் பொதுமக்கள் கண்டு ரசித்து



ஆசனூர் வனப்பகுதியில் மூங்கில் பாத்திற்கு இடையே உள்ள யானை.

செல்கின்றனர்.

### கரடிகளின் எச்சம்

# சந்திரக...

## சென்னையி...

சென்னை, பிப். 28– ஞாயிற்றுக்கிழமை வர உள்ள சந்திரகிரகணத்தை சென்னையில் பார்க்கலாம்.

### கிரகணம்

2007–ம் ஆண்டின் முதல் சந்திரகிரகணம் வரும் ஞாயிற்றுக்கிழமை (4–ந் தேதி) ஏற்பட உள்ளது. அன்று பிற்பகல் 3 மணி முதல் மாலை 6.42 மணி வரை சந்திரகிரகணம் நிகழும்.

இந்த சந்திரகிரகணத்தை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பார்க்க முடியும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இந்த சந்திர கிரகணத்தை முழு அளவில்

# ரெயில்களில் 90 ... முன்பதிவு ...

## நாளை முதல் அ...

சென்னை, பிப். 28– ரெயில்களில் 90 நாட்களுக்கு முன்பு முன்பதிவு செய்யும் வசதி நாளை தொடங்குகிறது.

### ஏமாற்றம்

ரெயில்களில் தூங்கும் வசதி கொண்ட 2–ம் வகுப்பு பெட்டிகளில் முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. விழாக் காலங்களில் டிக்கெட் கிடைக்காமல் பயணிகள் ஏமாற்றம் அடைகிறா...

தற்போது 2 மாதங்... முன்பே முன்பதிவு ...

# வாரம் - 13

**மாணவர் செயற்பாடு எண் - 3**

**மாணவர் பெயர் ........................................ நிலை............ நாள்................**

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

## நினைவூட்டல் -

**சக் பத் பத நக பந் நட நத நத் சந**

**கந வச வட வத மத தட தவ பத**

**ய்ய கய கய் நர கர வர சர டர்**

**ல்ல லல் கல நல வல லட் லர்**

**ன்ன வன மன சன் பன பன்**



# வாரம் - 13

**வீட்டு வேலை எண் - 1**

மாணவர் பெயர் ........................................ நிலை........... நாள்...............


## வ வ், ய் ய, ர ர், ல ல், ன் ன

( பத்து எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)



# வனவிலங்குகளின் சரணாலயமாக மாறியது சத்தியமங்கலம்

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் பவானிசாகர், ஆசனூர், தாளவாடி, டி.என். பாளையம் உள்பட வனப்பகுதிகள் உள்ளன.




இந்த வனப்பகுதி அடர்ந்த வனப்பகுதியாக கருதப்படுகிறது.

### சிறுத்தை–கரடி

இந்த வனப்பகுதியில் காட்டு யானை, காட்டு எருமை, புலி, சிறுத்தை, மான், கரடி, செந்நாய், கழுதைபுலி, எறும்புத்திண்ணி போன்ற பல்வேறு வகையான வனவிலங்குகள் வாழ்ந்து வருகிறது. இந்த வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி நடந்து முடிந்தது.

இந்த பணியில் ஈடுபட்டவர்கள் சிறுத்தை மற்றும் புலியை நேரில் பார்த்தார்கள். இது தவிர சத்திய மங்கலம், ஆசனூர், தாளவாடி ஆகிய வனப் பகுதிகளில் புலிகள், சிறுத்தைகளின் கால் சுவடுகளும் அதிகமாக காணப்பட்டுள்ளது.

### அதிகரிப்பு

இது வனத்துறை யினர்களுக்கு இன்பத்தையும், அதிர்ச்சியையும் அளித்துள்ளது. மேலும் செந்நாய்களை பல்வேறு இடங்களில் பார்த்துள்ளனர். கழுதைப்புலிகளும் கண்களில்பட்டுள்ளது. சந்தன கடத்தல் மன்னன் வீரப்பன் உயிரோடு இருந்தபோது யானைகளை கொன்று தந்தத்தை வெட்டி எடுத்தான். இதனால் யானைகள் குறைய தொடங்கியது. இப்போது வீரப்பன் இல்லை. இதனால் யானைகள் பல அதிகரித்துள்ளது.

புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தால் தாளவாடி மற்றும் ஆசனூர் மலைப்பகுதிகளில் இருந்த காட்டெருமை தற்போது சமதளமான வனப்பகுதியான பண்ணாரி பகுதிக்கு அதிகமாக இடம் பெயர்ந்துள்ளது.

சிறுத்தைகளின் எண்ணிக்கை கூடியளவு மான்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்துள்ளது. நாள்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் சத்தியமங்கலத்தில் இருந்து பண்ணாரி செல்லும் வழியில் உள்ள வனக்குட்டையில் நூற்றுக்கணக்கான மான்கள் கூட்டம், கூட்டமாக வந்து தண்ணீர் குடித்துவிட்டு செல்வதை இந்த வழியாக செல்லும் பொதுமக்கள் கண்டு ரசித்து



ஆசனூர் வனப்பகுதியில் மூங்கில் மரத்திற்கு இடையே உள்ள யானை.

செல்கின்றனர்.

### கரடிகளின் எச்சம்

---

# சந்திரக

## சென்னையி

சென்னை, பிப். 28–

ஞாயிற்றுக்கிழமை வர உள்ள சந்திரகிரகணத்தை சென்னையில் பார்க்கலாம்.

### கிரகணம்

2007–ம் ஆண்டின் முதல் சந்திரகிரகணம் வரும் ஞாயிற்றுக்கிழமை (4–ந் தேதி) ஏற்பட உள்ளது. அன்று பிற்பகல் 3 மணி முதல் மாலை 6.42 மணி வரை சந்திரகிரகணம் நிகழும்.

இந்த சந்திரகிரகணத்தை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பார்க்க முடியும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இந்த சந்திர கிரகணத்தை முழு அளவில்

---

# ரெயில்களில் 90

# முன்பதிவு 

## நாளை முதல் அ

சென்னை, பிப். 28–

ரெயில்களில் 90 நாட்களுக்கு முன்பு முன்பதிவு செய்யும் வசதி நாளை தொடங்குகிறது.

### ஏமாற்றம்

ரெயில்களில் தூங்கும் வசதி கொண்ட 2–ம் வகுப்பு பெட்டிகளில் முன்பதிவுசெய்து பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. விழாக் காலங்களில் டிக்கெட் கிடைக்காமல் பயணிகள் ஏமாற்றம் அடைகிறார்கள்.

தற்போது 2 மாதங் முன்பே முன்பதிவு

# வாரம் - 13

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )
(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| ர்<br>ர | ல்<br>ல | ன் | ன | ண் | ண |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |